1982 மார்ச் 30]

Appointment of Foreign Travel Agents to promote foreign Tourists

*Q. No. 681. THIRU N.S.V. CHITTHAN: Will the Hon. the Minister for Information and religious Endowments be pleased to State:

(a) whether the Tamil Nadu Tourist Development Corporation Ltd., has commissioned foreign travel agents to promote foreign tourist from Singapore into Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 1981 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் திருவாளர்கள் கனேஷ் ஏஜென்சீஸ் மற்றும் திருவாளர்கள் ஜி. சி. நந்தா அன்ட் சன்ஸ் (பிரைவேட்), லிமிடெட் ஆகியோரை மலேசியா மற்றும் சிங்கப்பூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது விற்பனை முகவர்களாக (General Sales Agents.) நியமித்துள்ளது. இந்த நியமனங்களுக்கு இந்திய அரசின் சுற்றுலாத் துறையும், ரிசர்வ் பாங்கும் அனுமதி அளித்துள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் விற்பனை முகவர்களை நியமித்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு எந்த விகிதத்தில் கணக்கிடப்பட்டு ஊதியம் வழங்கப்படுகிறது? அல்லது கமிஷனாக வழங்கப்படுகிறதா? மேற்கொண்டு இப்படிப்பட்ட முகவர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, விற்கப்படும் டிக்கெட்டுகளின் கட்டணத்தில் $12\frac{1}{2}$ சதவீதம் அவர்களுக்கு கமிஷன் தரப்படுகிறது. இதைப்போல் வேறு வெளிநாடுகளிலும் நியமிப்பதற்கு சுற்றுலாத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, வெளி நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே தமிழகத்திலே உள்ள கலாச்சாரத்தை, கலைகளை மிக நல்லமுறையிலே தெரிந்தவர்களையும், அதே நேரத்தில் தமிழ் நாட்டு கைவினை பொருள்

[1982 மார்ச் 30

களை எல்லாம் விற்பனை செய்யக்கூடிய வகையிலேயும் — நாம் வெளிநாட்டுக்கு சென்றால் அங்கேயுள்ள பொருள்களை எப்படி விற்பனை செய்வது என்பதைச் சொல்லக்கூடிய வகையிலே நம்மையெல்லாம் அவர்கள் வரவேற்கிறார்கள் — அது போன்ற தமிழ் நாட்டு கலைப் பொருள்களை வருகிறவர்கள் வாங்கக்கூடிய வகையிலே எடுத்துச் சொல்ல அனுபவமிக்கவர். வர்களை நியமிக்க அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே இருப்பவர்கள். அவர்கள் இங்கேயிருந்து வெளிநாடு செல்கிறபொழுது அனுபவம் பெற்றிருக்கிறார்கள். வெளிநாடுகளிலேயிருந்து இங்கே வருபவர்களுக்கு எந்த முறையிலே இவைகளைப்பற்றியெல்லாம் விளக்கம் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு வாய்ப்பில்லை. இப்பொழுது வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கெல்லாம், நம்முடைய கலைப் பொருள்களை, இங்கே தயாரிக்கப்படுகிற பொருள்களை, இங்கே இருக்கிற கலைகளை எல்லாம் சொல்லி, அவர்களுக்காக அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலிருந்து இங்கே வருகின்றவர்களுக்கு டிக்கட் விற்பனைக்கு மட்டும் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் இங்கே வருவதற்கு, அவர்கள் ஆசையைத் தூண்டுவதற்கு, வீடியோ டேப் மூலம், நம்முடைய கலைகள், மற்றைய இதர சிறந்த அம்சங்களைப் போட்டுக் காண்பிக்கவும் இந்த ஏஜன்சிகள் பயன்படுத்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சிகளை சுற்றுலாத் துறையிலேயே இப்பொழுது மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 682—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?

TRUTH ALONE TRIUMPHS